# தேர்வாளர்கள் கடைபிடிக்க வேண்டிய அறிவுரைகள்
# (Instructions to the candidates)

1. தேர்வாளர்கள் 09.01.2016 அன்று காலை 9.30மணிக்கு எழுத்துத்தேர்வு நடைபெறும் மையத்தில் இருத்தல் வேண்டும்.
2. தேர்வாளர்கள், தங்களது புகைப்படத்தினை நுழைவுச்சீட்டில் ஒட்டிட வேண்டும்.
3. தேர்வாளர்கள், தேர்வுக்கூட கண்காணிப்பாளர் முன்னிலையில் நுழைவுச்சீட்டில் கையொப்பமிட வேண்டும்.
4. தேர்வாளர் இயந்திரஇயக்கி, இளநிலை புத்தகம் கட்டுநர், இளநிலை மின்வினைஞர், இளநிலை கம்மியர், உதவி வெப்ஆப்செட் டெக்னீஷியன், ஆப்செட் மெஷின் டெக்னீஷியன், உதவி ஆப்செட் மெஷின் டெக்னீஷியன், தொலைபேசி இயக்குபவர் போன்ற பதவிகளில், எத்தனை பதவிகளுக்கு விண்ணப்பித்திருப்பினும் ஒரே ஒரு தேர்வு மட்டுமே எழுதிட அனுமதிக்கப்படுவார்.
5. **ஒரு தேர்வாளருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தேர்வு நுழைவுச்சீட்டுகள் (Hall ticket) வரப்பெற்றிருந்தால், ஏதேனும் ஒரு இடத்தில் மட்டுமே ஒரு தேர்வு எழுதிடலாம்.**
6. இதர நுழைவுச்சீட்டு எண். விவரங்களை எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககத்திற்கு கடிதம் மூலமாகவோ, நேரிலோ தெரிவிக்கலாம்.
7. தேர்வாளர்கள் 09.01.2016 அன்று காலை 10.30மணிக்கு பின்னர் தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்.
8. தேர்வாளர்கள் 09.01.2016 அன்று பிற்பகல் 1.00 மணிக்குப் பின்னரே தேர்வுமையத்தினை விட்டுச்செல்ல வேண்டும்.
9. தேர்வாளர்கள், கருப்பு மற்றும் ஊதா மையினால் தேர்வு எழுதிடலாம். இதர வண்ண பேனாக்களை பயன்படுத்திடக் கூடாது.
10. தேர்வாளர்களின் கைபேசி, கணிப்புப்பொறி (Calculator) Laptop, Tablet. போன்ற மின்னணு சாதனங்களை தேர்வு மையத்தினுள் எடுத்துச்செல்ல அனுமதி இல்லை.
11. நுழைவுச்சீட்டில் புகைப்படம் (Scanned Photo) இல்லாத தேர்வாளர்கள், நுழைவுச்சீட்டில் புகைப்படம் ஒட்டப்பட்டு அரசு பதிவுபெற்ற அலுவலரின் சான்றொப்பத்துடன், பின்வரும் ஏதேனும் ஒரு புகைப்பட அடையாள அட்டையின் நகலினை ஆதாரமாக எடுத்துவர வேண்டும். (உதாரணம்: வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, வாகன ஓட்டுநர் உரிமம், வங்கி கணக்கு புத்தக அட்டை, குடும்ப அட்டை, தபால் துறையால் வழங்கப்பட்ட புகைப்பட அடையாள அட்டை)
12. தேர்வாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தேர்வு மையத்தில், அரசு விதிகளுக்கு புறம்பாக நடந்துகொண்டாலோ, தேர்வு மையத்தின் கண்காணிப்பாளரிடம் ஒழுங்கீனமாக நடந்துகொண்டாலோ சம்பந்தப்பட்ட நபரின் தேர்வு முடிவினை இரத்து செய்திட எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.
13. தேர்வாளர்களுக்கு போக்குவரத்து பயணப்படி வழங்கப்படமாட்டாது.
14. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் மேற்கொள்ளப்படும் நேரடி நியமனம் தொடர்பாக 09.01.2016 அன்று நடத்தப்பெறும் எழுத்துத்தேர்வுக்காக நுழைவுச்சீட்டு 02.01.2016க்குள் தபாலில் கிடைக்கப்பெறாத நபர்கள் 09.01.2016க்கு முன்னரே எல்லா நாட்களிலும் அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.
15. அவ்வாறாக, நுழைவுச்சீட்டினை பெற விரும்புவோர், தங்களது புகைப்பட அடையாள அட்டையினையும், இருப்பிடச்சான்றினையும் நேரில் கொண்டு வரவும்.
16. பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு, தேர்வு எழுதுவதற்கு உதவியாளர்கள் (SCRIBE) ஏற்பாடு செய்யப்படும்.